வில்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும் அனுப்பி இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் அனுப்பி இருக்கிறார்கள். காவல் துறை அதிகாரிகளுக்கும் அனுப்பி இருக்கிறார்கள். இந்தப் புகார் குறித்து அந்தப் பகுதி யிலே இருக்கின்ற நூற்றுக்கணக்கான விவசாயிகள் கையெழுத் திட்டு அரசாங்கத்திற்கும் அனுப்பி இருக்கிறார்கள். அந்தப் புகாரின் நகல் கூட என்னிடத்திலே இருக்கின்றது. ஆகவே இப் படிப்பட்ட குற்றங்கள் பரவலாக நடைபெற்று வருகின்றன. நான் முதலிலே கூறியதுபோன்று அந்தத் திருட்டுக் கும்பலிடம் வெடி குண்டு இருப்பதாக அந்தப் பகுதிகளுக்கு மாடு மேய்க்கச் சென்ற சில விவசாயிகள் அதனைப் பார்த்ததாகக் கூட புகார்கள் எல்லாம் கொடுத்திருக்கின்றார்கள். இதனால் அந்தப் பகுதியிலே ஒரு பீதியே ஏற்பட்டிருக்கிறது. இவைகளைப்போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டேன். அவைகளை எல் லாம், சட்டம் ஒழுங்கு விதிகளின் கீழ், திருட்டுக் குற்றங்களை கண்டு பிடித்து தண்டனை வழங்கவும் மேற்கொண்டு திருட்டுக் குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கும் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்துள்ள சில பல புகார்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், சில பல புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். அப்படி ஏதாவது இருந்து அதை அரசின் கவனத் திற்குக் கொண்டு வருவார்களேயானால் அப்படி எடுக்கப் படாமல் இருந்தால், எடுக்க வேண்டிய முயற்சிகளை அரசு மூல மாக எடுத்துக் கொள்ளப்படும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சேந்தமங்கலம்—கதிரா நல்லூரில் ஏற்பட்ட தீவிபத்து.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், சேந்த மங்கலம் தொகுதி, கதிராநல்லூர் பஞ்சாயத்து, நத்தமேடு கிராமத் தில் 9—4—1981 ஆம் தேதி அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 57 வீடுகள் பாதிக்கப்பட்டது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், கதிராநல்லூர் கிராமத்திலுள்ள நத்தமேடு என்ற இடத்தில் 9—4—1981 அன்று மாலை சுமார் 5 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. விபத்து தற்செயலாய் ஏற்பட்டது. விபத்தில் உயிர்ச் சேதமோ, கால் நடைச் சேதமோ இல்லை. மொத்தச் சேத மதிப்பு சுமார் ரூபாய் ஒரு இலட்சம். 43 குடியிருப்புகள் முழுவதுமாகவும், 11 குடியிருப்புகள் பகுதியாகவும் சேதமடைந்தன. முழுவதுமாகப் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்குத் தலா ரூ. 200 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்குத் தலா ரூ. 50 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றிற்கும் அரிசி, மண்ணெண்ணெய் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டது. வேட்டி, புடவை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் வட்டம், கதிராநல்லூர் கிராமத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட அந்த 57 குடும்பங்களில் வசிப்பவர்கள் தேவேந்திரன் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சுமார் 300 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். மிகவும் வறுமையால் வாடும் மக்கள் அவர்கள். இந்த விபத்தினால் அந்த மக்களுடைய துணி மணிகள், பாத்திரம், பண்டங்கள், பணம் பத்திரங்கள் ஆகியவை சுமார் $1\frac{1}{4}$ இலட்சம் ரூபாய் அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே அந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அந்த நத்தமேடு பகுதியும் புறம்போக்கு பகுதியாக இருப்பதினால் அந்த இடத்தை அவர்களுக்கே வீட்டு மனைப் பட்டா செய்து கொடுக்க அரசு ஆவண செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே தீ விபத்திற்கும், வீட்டு மனைப் பட்டாக் கொடுப்பதற்கும் சம்பந்தம் இல்லை, என்றாலும் அந்த மக்கள் ஏழை எளிய மக்கள் என்பதைக் கணக்கில் கொண்டு அவர்கள் அதற்கான மனுக்களை கொடுப்பார்களேயானால், தனியாக விசாரித்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக, 2,000 ரூபாய்

1981 ஏப்ரல் 24]

மானியத்துடன் கூடிய, 5,000 ரூபாய் கடனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்கும் அந்த 2,000 ரூபாயை அந்த மக்களுக்கு அவர்கள் ஆதி திராவிடர்களாக இருந்தால், வட்டி இல்லாத கடனாக கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் தலைவன் என்ற முறையிலே, 7-வது சட்டமன்றப் பேரவையின் முதல் அறிக்கையினை, தீயணைப்புத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு உள்ள நடவடிக்கைகள் குறித்து, மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது அறிக்கையினை, அவைமுன் வைக்கிறேன்.

6. அறிவிப்பு.

பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த நிகழ்ச்சிக்குப் போவதற்கு முன், அதாவது 1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டம்—கல்வி மானியத்தின் மீது விவாதத்தை தொடர்வதற்கு முன்பு, நான் ஒன்றைத் தெளிவு படுத்திக்கொள்ள விரும்புகிறேன். நிறைய உறுப்பினர்கள் கல்வி மானியத்தின் மீது பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும் 1 மணி நேர அவகாசம் கேட்டுள்ளார், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் 1 மணி நேர அவகாசம் கேட்டுள்ளார். நாளைக்கு உணவு மானியம் எடுக்க இருக்கிறது. விருத்தாசலத்தில் துப்பாக்கிச் சம்பவம் குறித்தும் பேச வேண்டும் என்றும் அவையில் எடுக்க வேண்டும் என்றும் நிறைய உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகையினால் இன்றைக்குள் முடிக்க வேண்டும் என்பதைக் கருதி மாலையிலும் அவையை வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அவையின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

சரி. எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள் என நினைக்கிறேன் பேரவை மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை கூடும் என்று அறிவிக்கிறேன்.